அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2023

# தமிழ்

# ஆண்டு 8

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்:** 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: 03.06.2023** | **பக்கங்கள்:** 16 |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. இலத்தீன் மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்தவர்
   1. யி. யு. போப்
   2. இராபர்ட் கார்டுவெல்
   3. வீரமாமுனிவர்
   4. அல்பேட் சுவைட்சர்

2. நிகழ்கால இடைநிலைகள்
   1. த், ப், வ்
   2. த், ட், ற், ன், இன்
   3. கின்று, கிறு
   4. ப், வ்

3. நூலின் தொடக்கத்தில் அந்நூலை அறிமுகப்படுத்தி எழுதும் உரை
   1. முன்னுரை
   2. பதிப்புரை
   3. வெளியீட்டுரை
   4. கட்டுரை

4. சோழர் ஆட்சிக்காலத்தில் ஈழத்தின் தலைநகராக விளங்கியது
   1. பொலநறுவை
   2. அநுராதபுரம்
   3. கொழும்பு
   4. நல்லூர்

5. வானம் + வில் என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. வானம்வில்
   2. வானமில்
   3. வானவில்
   4. வானவ்வில்

6. திறமையின் ஆற்றல் எனும் பொருள் குறிக்கும் பழமொழி
   1. சிறுதுரும்பும் பல் குத்த உதவும்
   2. நிழலின் அருமை வெயிலில் தெரியும்
   3. துள்ளிய மாடு பொதி சுமக்கும்
   4. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

7. தமிழர் வீரத்தின் விளைநிலமாகத் திகழ்வது
   1. காலி
   2. வன்னி
   3. மாத்தறை
   4. கொழும்பு

**1 2 3 4**

8. எழிலி தாமரை போன்ற முகம் கொண்டவள். இதில் வந்துள்ள உவமேயம்
   1. போன்ற
   2. தாமரை
   3. எழிலி
   4. முகம்

9. கனவு என்பதன் எதிர்ப்பொருட் சொல்
   1. மறதி
   2. நனவு
   3. தெளிவு
   4. மறைவு

10. நான் யார் என்ற பாடத்தில் "நாம் எங்கு சுற்றித் திரிந்தாலும் எங்களது அடையாளங்களை மறக்கக்கூடாது" எனக் கூறியது
    1. குதிரை
    2. நாய்
    3. ஆடு
    4. ஈ

11. கார்த்திகை பூத்தது. இதில் கார்த்திகை என்பது
    1. காலவாகுபெயர்
    2. குணவாகுபெயர்
    3. பொருளாகுபெயர்
    4. இடவாகுபெயர்

12. குழந்தை தன்னந்தனியாக நின்றது. இதில் தன்னந்தனி என்பது
    1. இரட்டைக்கிளவி
    2. அடுக்கிடுக்குத்தொடர்
    3. இணைமொழி
    4. அடுக்குத்தொடர்

13. பிரித்தானியர் ஆட்சியின்போது தமிழர் உயர்கல்விக்காகச் சென்ற நாடுகளுள் ஒன்று
    1. வட ஆபிரிக்கா
    2. தென் ஆபிரிக்கா
    3. மொறிசியசு
    4. அமெரிக்கா

14. சேந்தன் உயிர்களிடத்தில் கழிவிரக்கம் உடையவன். இதில் கழி என்பது
    1. பெயர்ச்சொல்
    2. வினைச்சொல்
    3. உரிச்சொல்
    4. இடைச்சொல்

15. ஆறப்போடுதல் எனும் மரபுச்சொற்றொடர் குறிக்கும் பொருள்
   1. அழிவு விளைவித்தல்
   2. ஒழுங்கு செய்தல்
   3. பிழைப்பைக் கெடுத்தல்
   4. காலம் தாழ்த்துதல்

16. ‘அக்கினிச் சிறகுகள்’ எனும் நூலை எழுதியவர்
   1. து. உருத்திரமூர்த்தி
   2. டாக்டர் அப்துல் கலாம்
   3. சுவாமி விபுலாநந்தர்
   4. யோசப் பெசுக்கி

17. குளத்தில் அன்னங்கள் நீந்தி விளையாடின. இதில் விளையாடின என்பது
   1. ஒன்றன்பால் நிகழ்காலம்
   2. பலர்பால் இறந்தகாலம்
   3. பலவின்பால் இறந்தகாலம்
   4. பலவின்பால் நிகழ்காலம்

18. பாடகனுக்குப் பாடகி போல மாணவனுக்கு
   1. மாணவி
   2. மாணவள்
   3. நண்பி
   4. பாடினி

19. கயிலாயவன்னியனின் அரசு அமைந்திருந்த இடம்
   1. கற்சிலைமடு
   2. உடையாவூர்
   3. பனங்காமம்பற்று
   4. பூநகரி

20. நீ அஞ்சி ஓடாதே. இச்சொல்லியம்
   1. வியங்கோள் ஒருமை வினைமுற்று
   2. எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்று
   3. ஏவல் பன்மை வினைமுற்று
   4. எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று

21. வரைகள் இயற்கை எமக்குத் தந்த கொடை. இதில் வரைகள் என்பது
   1. காடுகள்
   2. மலைகள்
   3. ஆறுகள்
   4. கடல்கள்

1 2 3 4

22. அறநூல் காலம் என்பது
    1. சங்ககாலம்
    2. பல்லவர் காலம்
    3. சோழர் காலம்
    4. சங்கமருவியகாலம்

23. முத்தமிழ் விழாவில் சேரனால் நாடகம்
    1. நடித்தான்
    2. நடிக்கிறான்
    3. நடிக்கப்பட்டது
    4. நடிப்பான்

24. தோற்கருவிகளுள் ஒன்று
    1. தண்ணுமை
    2. யாழ்
    3. சேமக்கலம்
    4. ஏழில்

25. போர்ப்படை என்பதன் சொற்பிரிப்பு
    1. போ + படை
    2. போர்ப் + படை
    3. போர் + ப்படை
    4. போர் + படை

(25 X 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.**

1. நூற்றாண்டு: ______________________________

______________________________

2. மெல்ல மெல்ல: ______________________________

______________________________

3. மின்னஞ்சல்: ______________________________

______________________________

(3 X 2 = 6 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்டதன் நோக்கம் யாது?

_______________________________________________

_______________________________________________

2. போர்த்துக்கேயர் ஈழத்திற்கு வந்தபோது தமிழீழப் பகுதியில் இருந்த அரசுகள் எவை?

_______________________________________________

3. திருக்குறளின் சிறப்புப் பெயர்கள் இரண்டு எழுதுக.

_______________________________________________

4. சங்கமருவிய காலத்தில் பரவிய வழிபாட்டு நெறிகள் எவை?

_______________________________________________

5. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

தெரிநிலை வினைமுற்று: _______________________________

குறிப்பு வினைமுற்று: _______________________________

6. பின்வரும் வேற்றுமைகளின் உருபுகள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

6ஆம் வேற்றுமை: _______________________________

_______________________________________________

7ஆம் வேற்றுமை: _______________________________

_______________________________________________

7. தரப்பட்டுள்ள சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றை எழுதுக.

நாம் தமிழ்ப்பள்ளிக் கலைவிழாவில் இனிமையாகப் பாடிய நண்பனைப் பாராட்டி மகிழ்ந்தோம்.

பெயரெச்சம்: ________________ வினையெச்சம்: ________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**4. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

அன்பை அறிவைப் போற்றுங்கள்
ஆற்றல் செயலில் காட்டுங்கள்
இனிய தமிழில் பேசுங்கள்
ஈகைப் பண்பைக் கூட்டுங்கள்

உண்மை உழைப்பைப் போற்றுங்கள்
ஊக்கம் கொண்டு வாழுங்கள்
எண்ணம் உயர்வு கொள்ளுங்கள்
ஏற்ற செயலைச் செய்யுங்கள்

ஐயன், அம்மை போற்றுங்கள்
ஒன்று சேர்ந்து வாழுங்கள்
ஓதல் செயலைச் செய்யுங்கள்
ஔவை சொல்லைக் கேளுங்கள்

\- வெற்றிச்செழியன்

1. நாம் ஆற்றலை எதில் காட்ட வேண்டும்?

______________________________________________

2. நாம் எப்பண்பைக் கூட்ட வேண்டும்?

______________________________________________

3. நாம் போற்ற வேண்டியவர்கள் யாவர்?

______________________________________________

4. யாருடைய சொல்லைக் கேட்க வேண்டும்?

______________________________________________

(4 x 1 = 4 புள்ளிகள்)

5. **தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.**

**ஆங்கிலம்:**

1. I go to the library and read books,
2. The fruits are very tasty during summer.
3. When it is snowing, the children make snow dolls and enjoy have fun.
4. The tenth anniversary was held in our school.
5. We should live healthy lives by doing physical exercises daily.

**யேர்மனி:**

1. Ich gehe in die Bibliothek und lese Bücher.
2. Im Sommer sind Früchte sehr lecker.
3. Während es schneit, machen Kinder einen Schneemann und sind glücklich.
4. An unserer Schule fand das zehnjährige Jubiläum statt.
5. Lasst uns täglich Sport treiben und gesund leben.

**நோர்வே:**

1. Jeg drar til biblioteket og leser bøker.
2. Frukt smaker godt på sommeren.
3. Barn lager snømann og er glad når det snør.
4. Det var 10 års jubileumsfeiring på vår skole.
5. Man må trene daglig og leve sunt.

**இத்தாலி:**

1. Io vado in biblioteca a leggere libri.
2. D’estate la frutta è molto deliziosa.
3. Quando nevica i bambini si divertono a fare pupazzi di neve.
4. Nella nostra scuola si è svolto il decimo anniversario.
5. Facciamo esercizi fisici quotidianamente e viviamo sani.

**நெதர்லாந்து:**

1. Ik ga naar de bibliotheek en lees boeken.
2. In de zomer is het fruit erg lekker.
3. Als het sneeuw vinden de kinderen het leuk om sneeuwpoppen te maken.
4. Onze school vierde haar tienjarig bestaan.
5. Laten we dagelijks bewegen en goed leven.

**டென்மார்க்:**

1. Jeg tager på biblioteket og læser bøger.
2. Om sommeren smager frugterne meget godt.
3. Når det sner, laver børnene fornøjet snemænd.
4. På vores skole blev der afholdt tiårsjubilæum.
5. Lad os dyrke motion dagligt og leve godt.

**சுவீடன்:**

1. Jag går till biblioteket och läser böcker
2. På sommaren är frukterna mycket goda.
3. När det snöar gör barnen snögubbar och är glada.
4. 10 årsdagen firades på vår skola.
5. Vi tränar dagligen och lever bra.

**பின்லாந்து:**

1. Käyn kirjastossa ja luen kirjoja.
2. Hedelmät ovat erittäin maukkaita kesällä.
3. Lumen sataessa lapset tekevät lumiukkoja iloitaakseen.
4. Koulussamme tapahtui 10- vuotisjuhlat.
5. Treenataan päivittäin ja eletään terveinä.

**தமிழ்:**

1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

(5 X 1 = 5 புள்ளிகள்)

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. மகாகவி து. உருத்திரமூர்த்தி

2. தமிழிசை

3. புலம்பெயர் நாடுகளில் தமிழ்க்கல்வி

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- பல்லினச் சூழலில் தமிழ்மொழியின் தேவை
- தமிழ்மொழி கற்பதனால் கிடைக்கும் பயன்கள்
- தமிழ்மொழி கற்காவிடின் ஏற்படும் தீமைகள் (15 புள்ளிகள்)

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

தமிழீழப்பகுதி பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலவளத்தைக் கொண்டுள்ளது. இங்கு மக்களின் உணவுத் தேவைக்காக நெற்பயிர் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. மழையை நம்பிய நெற்செய்கை பெரும்போகம் என்றும் குளங்களிலிருந்து பெறப்படும் நீர்ப்பாசன முறையைப் பயன்படுத்தும் நெற்செய்கை சிறுபோகம் என்றும் அழைக்கப்படும். மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி போன்ற பகுதிகளில் பெரும்போகம், சிறுபோகம் ஆகிய இருநெற்செய்கைளும் நடைபெறுகின்றன. யாழ்ப்பாணம், பூநகரி போன்ற இடங்களில் மழையை நம்பி நெல்லைப் பயிரிடுவர். கிளிநொச்சியில் சிறுபோக நெற்செய்கைக்கு இரணைமடுக் குளத்திலிருந்து நீர் பெறப்படுகிறது. தமிழீழத்தில் பல வகையான நெல் இனங்கள் பயிரிடப்படுகின்றன. அவற்றுள் பச்சைப்பெருமாள், மொட்டைக்கறுப்பன், மடத்தவழு போன்றவை மரபுவழி நெல் இனங்களாகும். தமிழீழப் பகுதி முழுவதும் நெற்பயிர்ச்செய்கை இடம்பெற்றாலும், மட்டக்களப்பு மாவட்டம் தமிழீழத்தின் நெற்களஞ்சியம் எனப் போற்றப்படுகிறது. தமிழீழத்திலிருந்து தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுள் ஒன்றாக அரிசி விளங்குகிறது. வறட்சியான நிலத்தைப் பண்படுத்தி அதை வளமுள்ள நிலமாக்கிப் பயிர் விளைவிக்கும் உழவர் எங்கள் தாயகத்தின் முதுகெலும்பு ஆவர்.

1. பெரும்போக நெற்செய்கை என்று எதனை அழைப்பார்கள்?

_______________________________________________

_______________________________________________

2. பெரும்போகம், சிறுபோகம் ஆகிய நெற்செய்கைகள் நடைபெறும் பகுதிகள் எவை?

_______________________________________________

_______________________________________________

3. கிளிநொச்சியில் சிறுபோக நெற்செய்கைக்கு எங்கிருந்து நீர் பெறப்படுகிறது?

_______________________________________________

_______________________________________________

4. தமிழீழத்தின் மரபுவழி நெல் இனங்கள் இரண்டு எழுதுக.

5. தமிழீழத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுள் ஒன்று எது?

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. மாறியிருக்கும் சொல்லியங்களை ஒழுங்குபடுத்தி, பந்தி அமைப்புக்குப் பொருத்தமான எண்களைக் கட்டத்தினுள் எழுதுக.**

1. அப்போது பருந்து ஒன்று வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்ததைக் கண்ட தாய்க்கோழி, குஞ்சுகளை அணைத்துக் கொண்டது.
2. அதனைக் கண்டு தாயிடம் ஓடிவந்த குஞ்சைத் தாய்க்கோழி இறகுக்குள் அணைத்துக் காப்பாற்றியது.
3. கோழி ஒன்று தன் குஞ்சுகளுடன் இரைதேடிக் கொண்டிருந்தது.
4. சொற்கேளாது தனியே நின்ற குஞ்சைப் பிடிக்கப் பருந்து கீழே வந்தது.
5. குஞ்சுகளுள் ஒன்று தாயின் சொல்லைக் கேட்காமல் தனியே நின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |